सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு என இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக தற்போது இலங்கை ரூபா 250 மில்லியன் செலவில் 27 பாடசாலைகளைத் தெரிவுசெய்து மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்களை அமைப்பதற்க்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

2. இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளிலும் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடங்கள் இந்திய துணைத் தூதுவராலும் வடமாகாண கல்வி அமைச்சராலும் இணைந்து திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

3. இதன் அடுத்த கட்டமாக இன்று மன்னார் பாலைக்குலி அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலையிலும், மன்னார் பொற்கேணி அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலையிலும் மன்னார் இலந்தைமொட்டை அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலையிலும் மன்னார் தட்சிணாமருத மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் ஒவ்வொன்றும் முறையே 7 மில்லியன், 6.9 மில்லியன், 12.7 மில்லியன் மற்றும் 4 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறை தொகுதிகள் யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி க. சர்வேஸ்வரன் அவர்களால் இணைந்து இன்று (09.யூலை 2018) திறந்து வைக்கப்பட்டது.

4. விழாவில் உரையாற்றிய கல்வி அமைச்சர் மற்றும் ஏனைய பேச்சாளர்கள் இந்திய அரசாங்கத்தினால் வடமகாண கல்வி அபிவிருத்திக்கு வழங்கப்படும் பல்வேறு உதவித்திட்டங்களுக்காக தமது நன்றிகளைத் தெரிவித்தனர். கல்வித்துறை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர். இந் நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

***09 யூலை, 2018***
***யாழ்ப்பாணம்***